196

லாசநாதர் பதிகமும்

நித்யகல்யாணியம்மை

மும்மணிக்கோவையும்.

புரிசை, சு. முருகேசன்.

உ

சிவமயம்.

கண்டனூரைச்சார்ந்த

பாலையூர் கைலாசநாதபுரம்

ஸ்ரீ கைலாசநாதர் பதிகமும்,

ஸ்ரீ நித்யகல்யாணியம்மை

மும்மணிக்கோவையும்.

இவை

பாலையூர், அரு. அண்ணாமலைச்செட்டியார் குமாரர்
சபாபதி செட்டியாரவர்கள்
விரும்பியபடி
முத்தமிழ் ரத்னாகரம்
பானுகவியார் மாணவர்
புரிசை, சு. முருகேச முதலியார்
இயற்றியவை.

ஆங்கீரஸஹு



சாற்று கவிகள்.

ஆரணி ஜாகீர் காமக்கூர் தமிழ்ப்போதகாசிரியர்
திருவாளர் மு. சுந்தர முதலியாரவர்கள்

விருத்தப்பா.

சித்திதரும் பாலைநகர்க் கைலாச நாதபுரத் தேவன் மீதும்
முத்திதரு நித்தியகல் யாணியம்மை திருவடியா முளரிமீதும்
புத்திதரும் பதிகமும் மணிக்கோவை செய்தணிந்து புகழ்பெற்றானல்
பத்திதரு மோத்துரைச் சேர்புரிசை முருகேசப்பாவலோனே

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மாணவர்க்கழகம்
ப. பரலசுந்தர நயினாரவர்கள்

விருத்தப்பா.

சீராரும் பாலைநகர் கயிலைநாதன் திருவடிக்குங்
கல்யாணி செய்யதாட்கும்
ஏராரும் பதிகமொடு கோவையொன்று மெழில்பெறவே
தொடுத்தணிந்தானி சையினோங்க
பாராரும் விண்ணோரும் புகழுஞ்சீர்த்தி பலமலிநற்
றொண்டைவள நாட்டின்மேய
காராரும் பொழில்புடைசூழ் புரிசை வாழ்வோன்
கவினுறுநல் முருகேச கவிஞன் மாதோ.

குன்றக்குடி சிவாமடம்
ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பலசிவம் அவர்கள்
கட்டளைக்கலித்துறை.

அம்மணிக் காவை நிகர்பொழிற் பாலையூ ராண்டருளுஞ்
செம்மணிக் கோவைசூழ் நித்யகல்யாணி திருவடிகட்
கெம்மணிக் கோவையு மீடாகிடாதிதற்கென் றியம்ப
மும்மணிக் கோவை முருகேசன் பாடி முடித்தனனே.

திருவாளர் பண்டிட் ரேத்னம் அவர்கள்

ஆசிரியப்பா.

பெருங்கட லாடை நெருங்கிய வுலகிற்
கண்ணொளி மயக்குங் காரிருட் கிழித்துப்
பண்ணிய புதுக்கதிர் பரப்பும் பகலென
அருளினை யறியா தாணவத் தழுந்தி
மருளினைக் கொண்டலை மாந்தர்க ளேனும்
இருவினை யொன்றி மும்மலந் தணந்து
நாற்பொரு ளுணர்ந்து நல்வழி யடைய
மேற்படு புகழின் மிழலைநன் னாட்டுப்
பாலையூர்ப் பழம்பதி பாலதாய் விளங்கும்
காட்டுக் கோவிலாம் கைலையம் பதியில்
ஈட்டிய நிதிக்குவை யெனக்கண் களிப்ப
இனிதுவீற் றிருக்கும் இறைவியோ டிறைவன்
புனிதநற் றாட்களிற் பொருந்துக வென்றே
பதிகமாய்க் கோவையாம் பாமலர் தொடுத்து
முதுமறை மொழியின் நிதியெனச் சூட்டினன்
பிரசங் கனியும் பிரசங் கநயன்
புரிசை நகரினன் புலவர் பெருமகன்
தோமறு குணத்தன் தூயநற் புகழினன்
மாமுரு கேச மாதவ மணியே.

உ

சிவமயம்.

கண்டனூரைச்சார்ந்த

பாலையூர் கைலாசநாதபுரம்

ஸ்ரீ கைலாசநாதர் பதிகம்.

காப்பு.

சீரார்பூம் பாலைநகர்ச் சேர்கயிலை நாதனுக்கா
மேரார்பதிக மியம்புதற்கு—நேரார்
நலம்புரிவா னோடாறு நற்றவத்தோர்ப் போற்றும்
வலம்புரிவி நாயகன்முன் வந்து.

ஆசிரிய விருத்தம்.

பூமாலை மணிமாலை பொன்மாலை யணிவார்கள்
பொருள்மிகுந் தனதனிகர்வோர்ப்
புகழ்மாலை தாங்கொண்டு கற்பகந் தருமாலை
புனைவர்புத் தமுதநுகர்வோர்
தூமாலை யன்றிட்ட சுந்தரனு முயர்சுத்த
சொன்மாலை யெனவணிந்தான்
சூழ்மாலை யாய்க்கம்பை வார்ந்திடுங் காஞ்சிநகர்
துதைபத்தர் தம்மகக்கண்
காமாலை யாஞ்சமண ரிகழ்மாலை மேவாது
கன்மாலை யுஞ்சாத்தினர்
கனமாலை கண்டிலேன் மனமாலை கொண்டுளேன்
கதிர்மாலை யொத்தவடிவே
பாமாலை யல்லசொற் புன்மாலை புன்மாலை
படர்சடைய வேற்றருள்வையோ
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகை லாயபதியே.

கலைவேண்டு முயர்செல்வ நிலைவேண்டு முளமகிழ்
  கனிவுள்ள சுற்றம்வேண்டுங்
காணவேண் டும்மடியர் பேணவேண் டும்மவரை
  காக்கவேண் டுஞ்சினத்தை
விலைவேண்டு மடமாதர் மலைவேண்டு மெய்த்தனம்
  மேவாதி ருத்தல்வேண்டு
மேன்மைகொ ளுயிர்க்கெலா நன்மைபுரி யாக்கையே
  வேண்டுமரு ளுள்ளம்வேண்டு
மிலைவேண்டு நீர்வேண்டு நின்பதம் பூசிக்க
  வென்னுளத் தன்புவேண்டு
மெங்கெந்த வேண்டிடினு மங்கங்கு வந்துதவு
  மேந்தனினைப் போற்றவேண்டும்
பலைவேண்டு வெண்கரிக் கருள்செய்வெண் காடனே
  பண்புறுமறைக்காடனே
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
  பரமகை லாயபதியே. 2

கற்பகநன் னீழலுந் தேவானி னங்களுங்
  கருதுமிந்த் ராணிநலனுங்
கனகநில முப்பதும சங்கநிதி யும்மாவுங்
  கற்றவர்ம திக்குமாசும்
பொற்புயரு மிந்திரன் பெற்றதுந் தண்கமல
  போதன்முத னகர்முனிவர்
பூதேவர் மாதேவர் வாழ்க்கையுஞ் சால்புறப்
  போற்றுமைந் தொழிலினடையுந்
தற்பரநி னிடைவதியு மொருபெருஞ் சத்தியின்
  சதகூறி னொன்றினருளேல்
சடைமுடியில் மதியொளிரு மேந்தனின தொருதலைமை
  தமியனேன் புகலவெளிதோ

பற்பகலி னரிதேடு தங்கமே குற்றமில்
பக்தருள முற்றமணியே
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகை லாயபதியே. 3

நிலமில்லை பொன்னில்லை மணியில்லை மனையில்லை
நேர்புள்ள சுற்றமில்லை
நிகரற்ற வதிகாரஞ் செய்யவொரு வழியில்லை
நிதிபெருகு நண்பரில்லை
கலமில்லை தேரில்லை யொருபெரிய பரியில்லை
கண்டவர்ம திப்பதில்லை
காவுமில் லைக்கறவை யாவுமே யிலையென்று
கருதுபே ராசையல்லா
னலமில்லை யடியரைத் தேடவிலை யவாக
நாடினும் மீவதில்லை
நன்னூற் படிப்பதிலை கேட்பதிலை கேட்டவர்த
நண்பில்லை பண்புமில்லைப்
பலமில்லை யொருதமிய னுய்ந்திடநி னுயாருட்
பார்வைசற் றெய்தலுறுமோ
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகை லாயபதியே. 4

போராழி யீந்தன்று மாலடிமை கொண்டநீ
பிட்டுக்கு மண்சுமந்தாய்ப்
பெருமைபெறு சண்டிக்குத் தந்தைநீ வல்லாளன்
பிரியமுறு மைந்தனுனைச்
சீராழி யணியுமீ ளுட்சியர சேற்றநீ
தெரிவையர்கள் பலியுமேற்றாய்த்

திரிபுரா திகள்போரை வென்றநீ பார்த்தன்கைச்
சிலையினடி யுண்டிளைத்தாய்த்
தோழி கெடுநாளு மானேறு நீமதுரைத்
தெருவிலொரு பரியையூர்ந்தாய்
செய்யவா ரூரன்முடி யடிவைத்து வேடன்
செருப்பினடி கொண்டுகந்தாய்
பாராழி தன்னினின் விளையாட னீர்மையைப்
பன்னுத லெவர்க்குமெளிதோ
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகை லாயபதியே. 5

ஆலடியி னல்வர்குரு வாகவந் துற்றநீ
யறுமுகக் குருவையேற்று
யம்மையை மணந்திடப் பாகமுற வைத்தநீ
யவிர்சடையிற் கங்கைவைத்தாய்க்
கோலமறி யாதநீ குட்டியை வளர்த்திடக்
கோலமாய்ப் பால்கொடுத்தாய்க்
குலவனந் தேடரிய வெங்கைநீ கச்சூரிற்
கோதிலன் னந்தேடினாய்
மூலமறை நாட்டிய வடிவனீ வாசகன்
முதுமறையை நாடிவந்தாய்
மூவர்க்கு முதல்வனீ மதுரையினல் வளையல்விலை
மொழிவணிக னாகினின்றாய்
பாலனைய கைலையுறு மையநினை விடவடியர்
பண்பறியுந் தெய்வமுளதோ
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகை லாயபதியே. 6

பொன்னனைய துன்மேனி யெனவுன்னி னஃகிருளில்
பொலிவுறு விலையுமுளது
பூவனைய யென்னின் னரும்பிடும் பூத்திடும்
புதுமைபோய் வாடுமொவ்வா
மன்னுமொரு மாணிக்க வரையொக்கு மென்னினதில்
மணமில்லை மென்மையில்லை
வண்பவளஞ் சாம்பலாம் நின்மேனி யொருபகல்
வையமுன் சாம்பலாக்கு
மின்னொக்கு மென்னினது மேகத்தி னிடையலது
மிகுவெளியி லொளிர்வுறாது
மெச்சுமொரு மாலையெனி னெடுநேர நில்லாது
வெருவியிருள் வரவழியுமே
பன்னுமொரு பொருளுமொப் பில்லாத நின்வடிவை
பாவித்த லெப்படி சொலாய்
பாலநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப் 7
பரமகை லாயபதியே

அன்றுமத யானையை யுரித்தநீ மாயையெனு
மானையுரி வேண்டிடாயோ
வழல்வலி யடக்கிக்கை யேற்றநீ மாமோக
வழல்வலி யடக்கிடாயோ
கன்றிவரு காலனை வதைத்தநீ யென்வினைக்
காலனை வதைத்திடாயோ
கஞ்சனொரு முடிசெற்றநீ யகங்காரக்
கனத்தமுடி செற்றிடாயோ
துன்றுல காலவிட மேற்றநீ வஞ்சனைத்
தொலைவில்விட மேற்றிடாயோ
சோமனை முடிக்கணியு நீயென்றன் சொல்லிழைச்
சோமனைய ணிந்திடாயோ

பன்றிமலை யானைமலை பசுமலைக டிகழ்கின்ற
பாங்குபெறு மதுரையரசே
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகைலாய பதியே 8

ஆடரவு கங்கையுந் திங்களுங் கொன்றையு
மணிசடா முடியினழகு
மனல்மதிய மிரவியெனு மூவிழியு மலர்குமுத
வம்பவள வாயினழகுந்
தோடரவ மேற்றிடுத லன்றியுஞ் சம்பந்தன்
சொற்சுவைகொ ளிருசெவிகளுஞ்
சொல்லரிய பொன்னிற் பதித்தநன் னீலமென
சோதிதரு மணிகண்டமு
மீடரவ மில்லாத மழுவுமா னும்வரத
மிகலபய மிக்கவெழிலு
மென்புசிர மாலையத் திகளாமை பன்றியெயி
றேற்றொளிரு மார்பினணியும்
பாடரவ மிகுசபையி லாடுமிரு கழல்களும்
பத்தியொடெ னுள்ளமுறுமோ
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகை லாயபதியே 9

ஓங்குபுகழ் தில்லையுட் கூத்தனே காளத்தி
யுற்றபூங் கோதைபதியே
யுயாருணை சோதியே யகிலாண்ட வல்லிவள
ரொண்ணுவ ணகரிலிறையே
மாங்குயில்கள் பண்பாடு காஞ்சியே கம்பனே
மன்னுதிரு வாரூரனே

மருதூர னேபெருகு மையாற னேபொன்னி
வளமலியு மாயூரனே
தேங்குமிசை காழியிற் சட்டனே நாவரசு
சேரதிகை வீரட்டனே
தென்மதுரை மருகனே! யாசனே!! தேவனே!!!
திருவிரா மேச்சுரத்தோய்
பாங்குமிக நாடோறு மென்னினைவி னின்னடிகள்
பதியுமுயர் வரமருளுவாய்ப்
பாலைநகர் கைலாய நாதபுர மேவுசீர்ப்
பரமகை லாயபதியே. 10

கைலாசநாதர் பதிகம் முற்றிற்று.

அட்டநாகபந்தம்.

வெண்பா.

மாய சிவபூமா மாசூரா மாதிர
மாயிபமே நேராசு மாலைநிறை—வாயிலிடை
தாவு மறைமாவ தாஞான மாபாலை
மேவுகயி லாயசிவ மே

கொண்டுகூட்டு:- மாய! சிவ! பூமா! மாசூரா! மாதிர! மாயிபம் நேர் (யானையையொத்த) அரசு (அரிமர்த்தனன்) மாலை நிறை வாயிலிடை தாவும் மறை மாவ! மா பாலை மேவு கயிலாச சிவமே! ஞானம் தா.

உ

சிவமயம்.

கண்டனூரைச்சார்ந்த
பாலையூர் கைலாசநாதபுரம்
ஸ்ரீ நித்தியகல்யாணியம்மை
மும்மணிக்கோவை.

காப்பு.

பூமணக்கும் பாலைப் புகழ்கயிலைத் தேவென்றுந்
தாமணக்குங் கல்யாணித் தாயார்க்கு—நாமணக்க
மும்மணிக்கோ வைப்பாடல் முற்றுவிக்கு மைந்துகரச்
செம்மணிக்கோ வென்னுளமே சேர்ந்து.

நேரிசை யாசிரியப்பா

திருவளர் பாலைச் செழுமலர்ச் சோலையி
னீலகண் டற்கமை நித்யகல் யாணி
யம்மையே நின்னடிக் கடியனே னணியக்
கோவையொன் றியற்றினன் கோலமா ரிமயத்
தண்ணலன் றளித்த வம்பொற் கோவையுங்
காஞ்சனைப் பூட்டிய கதிர்மணிக் கோவையும்
முன்னவர் பலருரை முத்தமிழ்க் கோவையும்
புனைந்துள வன்னையென் புன்மொழிக் கோவையு
மேற்றருள் செய்வையென் றெண்ணினன் பல்மகார்
பெற்றோர் கடையிற் பிறந்த
வொருமகன் குதலைக் குருகுதல் வழக்கே.

வெண்பா

வழக்குரைத்தும் மண்சுமந்தும் மாணிக்கம் விற்றும்
பழக்குளித்தும் மாநரியைப் பண்டு—முழக்குமறை
மாலறியான் மேவல் மதுரைக்கு மன்மகளாய்ப்
பாலையுமை யீந்த பயன். 2.

கட்டளைக் கலித்துறை

பயன்பெற்ற னர்சிலை முன்னோர்கள் பாடியப் பாட்டிலுறும்
நயம்பெற்ற சொற்பொருள் நாடகில் லேன்இசை நன்கறியேன்
கயம்பெற்ற பாலையில் நித்யகல் யாணியே கண்டுமெனை
யபன்பெற்ற தென்செய்து மண்பெற்ற தென்பொழுத் தாய்ந்திலனே

நேரிசை யாசிரியப்பா

ஆய்ந்திலங் குங்கலை யனேகம் படிப்பினு
மோய்ந்திடா துலகெலா மோடிநீ ராடினும்
முக்காற் குளிப்பினு முழுமறை யோதினுந்
தக்கா னிவனெனத் தான்பெய ரெடுப்பினு
நெஞ்சினில் வஞ்சக நிறைந்தோர்
பாலையார் தாய்நின் படாருள் பெறாரே 4.

வெண்பா

ஆரேனு நின்னடிகட் கன்புடையார் கற்பமலர்த்
தாரோனும் போற்றுஞ் சதுர்பெறுவர்—நீரேனும்
பச்சிலையே விட்டுநின்றாள் பாவியார் பாலையா
யெச்சிலைக்கு மேங்குசில ரே 5.

கட்டளைக் கலித்துறை.

எங்குஞ் சிலர்க்கன்ன மீவார்கள் நாயக னிட்டநிறைந்
தோங்கும் பொருட்கொண்டு மங்கையர் பாலையி லொண்கொடிநீ
பாங்கன் றிருக்கையி லோடேந்தி யெங்கும் பலிக்கிரங்கத்
தாங்கும் மறங்கண்டு லெட்டிற்கு மேதபொன் சாற்றுவையே. 6.

நேரிசை யாசிரியப்பா

ஏரார் பாலை யெழுந்தரு ளமுதே
காரார் களமுடைக் கடவுள் வடிவினி
லிடப்பால் நின்ற வெழில்பெறு மேனியல
கடலூர் தொழுபார்க் கண்டனுக் காக
ஆழித் தீயு மொண்பரி முகமுறு
பாழித் தீயு மனையசெங் கண்ணொடு
மேதியி னேறி மிகுசினங் கொண்டு
காதிய பாசக் கயிறிடு சண்டனைத்
தமருட னழிந்திடத் தாக்கிய பாதமுங்
சுமானுக் காயுள் கொடுத்தருள் காமும்
வெள்ளியும் பொன்னு மிருகிற விரும்புமா
யுள்ளதே யன்றி யுலவுறுங் கோட்டைகள்
மூன்றுடைச் சூர்கொல மூரிவிற் கொண்டனுக்
தோன்றுமான் பற்றிய தூய்மையார் காமு
மம்பலந் தன்னினின் றாடவெ டுத்தருள்
செம்பொற் பதமுநின் றிகழுறுப் பாகவு
மாலமை ரீசனை யடியவ ரென்றுங்
காலனைக் கடந்தநற் காலனே யென்றும்
வரதா வென்றுனை வாழ்த்துவோர்க் கொன்றுங்
கருதா தளித்தருள் கர்த்தனே யென்று
மலைவில் லேந்து மகிபா வென்றுங்
கலைமான் கைக்கொளுங் காவலா வென்றும்
பாடும் போதெலாம் பக்கத் திருந்தும்
நாயக மன்று நாமே யென்று
தூயநீ குறிப்பினுஞ் சொல்லா தவக்கு
மொன்றே கொண்டு முணர்குவர்
நன்றே கற்பெழில் நாடவல் லாரே 7.

வெண்பா.

வல்லாரே யாயிடினும் வையமெலா மஞ்சுவிக்கும்
பொல்லாரே யாயிடினும் போகுமோ—சொல்லேறு
முன்னையூழ் போக்க முளரிமலர்ப் பாலையுமை
தன்னடியே போற்றிலமேற் றான் 8.

கட்டளைக் கலித்துறை.

தானே தனைநிகர் நின்கோனைக் கேட்டுரை சற்றெனக்கு
வானோர்க்கு முன்னே மதுரை மணந்தன் றன் மாமிவைத்த
தேனோ திகழ்வர்த்தி பிட்டதோ கண்ணப்பன் தின்றளித்த
வூனோ வுயர்சுவை யாதுகாண் பாலையுமையவளே. 9.

நேரிசை யாசிரியப்பா.

உமையெனப் பெயர்கொளு மொண்டொடி யாகித்
தக்கன் மகளெனத் தங்கினை சிலநாள்
பெண்மகப் பெற்றிடும் பேறே வேண்டி
யிமவான் பற்பக லிருந்தவம் புரிய
வாங்கவன் மகளென வமர்ந்தனை சிலநாள்
மற்றும் பற்பல வானவர் மனிதர்பால்
நேர்தவத் தளவே நின்றனை சிலநாள்
விச்சுவா வதியெனும் விஞ்சையன் மாது
சாந்திர விரதந் தன்னையே கொண்டு
பொன்னிதழ்க் கமலப் பூந்தடம் படிந்து
நேர்படத் தொழுது நின்னெதிர் நின்று
யாழ்கரங் கொண்டு யாவையு மறந்து
பல்நுல கீன்றநீ பனிவரைக் குழவியாய்ப்
பைங்கிளி வளர்த்துப் பழக்குமா றென்னே
அண்டஞ் சிறுசோ றாக்கிடு மமலைநீ
யாயத் துடன்விளை யாடுமா றென்னே

மறைமுடி வைக்கு மலர்த்தாள் மேனை
யடிமிசை நடிக்க வருந்தவ மென்னே
யென்றென் றுருகி யிருகண் ணீருக
வேண்டுநா ளளித்த வியன்பெரு வரத்தாற்
பொன்னிநா டென்ற பொன்னியே யாகி
மாதவள் தோன்ற மலையன் மனைத்தலை
யுங்கவன் வேள்வியி னழகுறத் தோன்றினை

இவற்றுள்

திருமுடி புனைந்ததுந் திசைபல வென்றதும்
நாதனை மணந்ததும் நல்லர சளித்ததும்
பாண்டி வளம்பெறப் பாலனைப் பயந்ததுங்
கன்னிநா டாதலின் காதனிற் றுயகம்
மங்கலம் பொங்கும் மதுரையென் றுணர்ந்தோம்
காலம னேகங் கண்ட
பல்வளப் பாலையார் பரமகல் யாணியே 10.

வெண்பா.

கல்யாணி கல்யாணி கல்யாணி யென்றுலகி
லெல்லோரை யும்புகல லேற்குமோ—கொல்லாலஞ்
செற்றுடுந் தில்லைச் சிவன்மனையாய்ப் பாலைவரு
முற்று விளமுலையாள் முன் 11.

கட்டளைக் கலித்துறை.

முன்னு ளெனைக்கொண்ட நாவலூர் நம்பியை முக்கணெந்தை
பின்னு ளெழிற்றேழ மைக்கொண்ட தேனென்று பேதமொன்று
முன்னு திருந்தனை கங்கையைக் கொண்ட துமையிடத்துப்
பன்னு திருக்கவென் றேபாலை மேவும் பசுங்கிளியே. 12.

நேரிசை யாசிரியப்பா.

பசுங்கிளிக் கூட்டமும் பண்ணிசைக் குயில்களும்
பூவையும் மயில்களும் புள்ளினத் தொகுதியும்
பார்ப்பவர் மகிழப் பதிநின் றாடி
யணுகினுந் தொடினு மணைப்பினு மடிப்பினுஞ்
சிறவுங் கடிக்கவுந் தெரியா நாகமுந்
தண்ணீர் கயத்தலைச் சதுர்பெற விருந்தும்
மீனுண் டறியா மிகுதிறற் கொக்குந்
தாமே தேடித் தமருட னுண்டு
பொன்னே கொடுப்பினும் பூடணங் கொடுப்பினும்
வத்திரங் கொடுப்பினும் வாங்காங் கவிகளு
மிதஞ்செய லன்றி யிடர்செயா வேங்கையும்
பல்லரி யெதிர்ப்பினும் பயப்படா வத்தியு
நிறைந்துயர் சோலையி னித்யசல் யாணியே
மிக்குயர் மதுரையின் விரூபாக் கன்கொடி
வைணவத் தொழுகிய மாமியா ரகத்து
பசிந்துந் தனித்தும் பரவினள் வேண்ட
வேடத் துயர்ந்த விருத்தனாய்ச் சென்று
கோதிலா துண்டு குமரனாய்ப் பாலனாய்
வந்தவ ரகற்ற மாதொடும் வீதிவாய்ப்
புக்கும றைந்து போர்விடைத் தனியே
தோன்றியக் கௌரியைத் தோனான் களித்துத்
தன்னிடங் கொண்டத் தயாபரன் சென்றநாள்
தாய்நீ கைலையிற் றனித்திருந் தனைகொல்—அன்றி
நின்னருட் டோன்றி நின்னையே யுன்னிய
வந்தணச் செல்வி யருப்பெரும் வடிவொடு
முப்பு மப்பு மொருப்படுந் தன்மைபோற்
கலந்துநிற் கேள்வற் கலந்தனை யேகோ
லருள்செய வேண்டுது மன்பார்
பாண்டியர் தவக்கொடி பழுத்ததீங் கனியே 13.

வெண்பா.

தீங்கனியே போன்றமொழிச் செங்கயலே போன்றவிழி
கோங்கரும்பே போன்றதனக் கோதையெனப்—பூங்கரும்போன்
காட்டுவழி வேண்டாங் கவின்பாலைத் தாயடியார்
நாட்டுவழி நெஞ்சே நட 14.

கட்டளைக் கலித்துறை.

நடமாடி னான்வெள்ளி யம்பலத் தன்றிரு நற்றவர்க்காய்ப்
படமாடு பாம்பணித் தேவென்ப ரேற்கும் பலித்தொழில்போய்த்
தடமாட மும்மா சும்நின்னை யும்பெற்ற சால்புமனத்
திடமாட வாடிடுஞ் செம்மலைப் பாலையிற் றெள்ளமுதே 15.

நேரிசை யாசிரியப்பா.

அமுதம் வேண்டிய வந்தணர் முன்னாண்
மந்தரந் தாங்கி வண்கட லிட்டே
யரவுதாம் பாக்கி யவுணரோ டலைப்ப
வார்த்தங் கெழுந்த வாலா லத்தைக்
கண்டனர் நடுங்கிக் கடவுளே யென்ன
வோலமிட் டடைந்த வும்பரார் பொருட்டாய்ச்
சுந்தரன் றாங்கிய தொலைவி லவ்விட
முண்டநா ளெந்தை யுயர்தருங் கண்டங்
கருப்புற் றென்பர் கருதா மவ்விட
மனலுரு வதன்பா லழியா தமைவகொ
ளேகம் பத்தி லெழில்பெருங் கம்பை
மாநிழ லமர்ந்த மங்கல முதல்வனை
தனத்தழும் பொடுவளைத் தழும்புற வணைத்த
நின்னெழில் வடிவ நீங்கலா நீல
நெஞ்சம துடைய நிமல
னீர்மைய கோசார் நித்யகல் யாணியே 6.

வெண்பா.

ஏரா ரிளங்கிளியே யீசனுகர் செந்தேனே
பாராதி பூத்தளிக்கும் பைங்கொடியே—நேராரும்
பூவளஞ்சால் பாலைவரும் பூவையே அன்புமிகு
மாவரமெற் கீந்தருளம் மா 17.

கட்டளைக் கலித்துறை.

மாவாழு மார்பற்குத் தங்கையைப் பாலை மணிவிளக்கை
மாவாழ வேரெட்ட கந்தற்கு மன்னையை மாமறையா
மாவாழு மேகம்பன் றேவியைப் போற்றிலர் மாமரையா
மாவாழுங் காட்டுறு மாபோன்ற சிற்சில மானிடரே 18.

நேரிசை யாசிரியப்பா.

மானிட மேந்து மதிமுடிப் பரமன்
மானிட மேந்துமம் மாலும் வழிபட
வாழி யளித்த வசுரனை மோதிய
வாழி யளித்த வருங்கிரு பாநிதி
யையா னனத்த னகிலம் படைத்த
வையா னனத்த னறிவருஞ் சோதியின்
கற்பகங் கொண்ட காதலி யாயினை
கற்பகங் கொண்டக் ககனமும் வென்றனை
சிந்துர முகத்தொரு தேவையும் வேல்கொடோர்
சிந்துர முகத்தெறு சேயையும் பெற்றனை
பாலையிற் கண்ணமர் பரமகல் யாணிநீ
பாலையிற் கண்ணமர் பாவையர் போல
வெறுக்கையு மின்பமும் வேண்டிகொல்
வெறுக்கையு மின்பமும் மேவறஞ் செய்தலே 19.

வெண்பா.

செய்தவிலை யொண்டவமுஞ் சேர்தவிலை நல்வினமு
மெய்தவிலை பாலையுமை யின்றளியு—முய்தவிலைப்
பொன்செய்வாய் வாதமிடும் போர்செய்வாய் காலனுற்
னென்செய்வாய் நெஞ்சே யிசை 20.

கட்டளைக் கலித்துறை.

நெஞ்சே யிசைக்கின்ற வண்டுண்டு பாட நெடிதுயர்ந்து
மஞ்சே புனைச்சோலை பாலையிற் கோயில்கொள் மாதவியை
யஞ்சேல் வினைக்கென்னு மன்னையைப் போற்றிலை யாயிழையார்
பஞ்சே பொருமடிக் கேங்குகின் றாயென்ன பாவமிதே 21.

நேரிசை யாசிரியப்பா.

பாவமீ தென்றும் பண்ணுமிங் கிதுநல
மாவதா மென்று மறிகிலா யாக்கையிற்
பன்னா ளுழன்று படிப்படி யாக
நன்னா ளெய்தி நலமிகு மானிட
முற்றிங் கிருக்கு முணர்வுடை யோரெனும்
நற்றவத் துலகீர் நாடுமின் நாடுமின்
வாரணா வதத்துயர் மாசில்விஸ் வேசனைப்
பூரணா குதிநிறைப் பொற்சபைக் கூத்தனை
மேவிட வேண்டிடின் மிகுதிறற் பாலையார்
பூவலர் சோலையிற் பூத்ததோர் பூவினை
யுன்னரு மண்டத் துயிரெலா மளித்துங்
கன்னியே யாயமர் காமர்பூங் கோதையைத்
தொழுமின் பாடுமின் சூழுமின் சூடுமி
னெழுமின் றொல்லைவிட் டேறுமி னற்கரைத்
தாய்வழிச் சென்றபின் றாதையா ரின்னருட்

செய்வழித் தாமெனத் தேறுமின் றேறுமி
னையறி வறியா வபலன்
மெய்யொளி யறிவதே மேலறி வாமே 22.

வெண்பா.

மேகமே வண்மைதனின் மேதினியி லொப்பில்லாய்
நாகமே பூண்டசிவ னல்வடிவோர்—பாகமே
மேவுதிருப் பாலையுமை மென்னிறம்போ னின்னிறமு
மாவதற்கென் செய்தா யறை 23.

கட்டளைக் கலித்துறை.

அறைகூவ லாந்தென் றிசைக்கால னைச்சற்று மச்சமின்றி
மறைகூவி நாடருந் தேவியைப் பாலைவாழ் மாமணியை
கறைகூர்ந்த வேலான் மகிடனைச் செற்றவக் காரணியை
நிறைகூர்ந்த வன்புடன் பூசிக்கு மாதவம் நேர்படினே 24.

நேரிசை யாசிரியப்பா.

நேர்படுந் தவத்தி னெறியெலாம் பெற்றுந்
தாருக வனத்துத் தவசிகள் பல்லோர்
கருமமே கொடுக்குங் கணிப்பிற் பொருளெலா
மேலொரு தெய்வதம் வேண்டுவ தில்லையென
வாணவ மலவிரு ளகன்றிடா வாற்றாற்
பன்னா ளுழைப்பின் பயன்பெறு ராயினர்
வனவள மிகுத்த வாழ்க்கையர் காவல
னுகன் றந்தையர் நன்மகன் றிண்ணன்
மான்கலை யன்றியோர் வண்கலை யுணரா
ஞான னறியா நற்பெருஞ் சோதியை
நாணனே காட்ட நயம்பெற வுணர்ந்து
ஆறே நாளி னமைந்தபே ரன்பாற்

கண்ணேயுந் தந்தெழிற் கைலையும் பெற்றன
னீர்வளங் குடிவள நிலவளம் மிகுத்த
பாலைவா ழும்மையே பக்தியொன் றில்லையேற்
கல்விக் கடற்கரைக் காணினுஞ்
சித்தியின் றென்றிதாற் றேர்ந்தறிந் தேனே 25.

வெண்பா.

தேனூர்ந்த பூங்கமலத் தேவியர்க ளோரிருவர்
தானூர்ந்த கட்கமலத் தாயாகும்—வானூர்ந்த
மிச்கபுகழ்ப் பாலை விமலையரு ளேயெவர்க்குந்
தக்ககலைச் செல்வந் தரும் 26.

கட்டளைக் கலித்துறை.

செல்வந் தருங்கலைக் கற்றூர்க ளென்னினுந் தேர்கரிமா
வில்வந்த மன்னரே யென்னினும் பாலையில் மேவுபா
னில்வந்த வம்மைநின் பாதாம்பு யத்தன்பை யெய்திலரேற்
புல்வந்த சென்மத்துந் தாழ்வாவ ரிப்பெரும் பூதலத்தே 27.

நேரிசை யாசிரியப்பா.

தலைத்தினி லுயர்ந்ததென் றண்டமிழ் நாட்டையும்
பிறப்பினி லுயர்ந்தவிம் மானிடப் பிறப்பையு
மளித்தனை பாலையு மடியவ ருள்ளமுந்
தனவாக் கோயிலாய்த் தங்குமா ரமுதே
வேண்டுவ தூண்டினும் வெய்யனே னுய்ந்திட
வழுவா நீதியும் வஞ்சமி லுள்ளமு
மடியரைக் காண்டொறு மன்பொடும் போற்றலுஞ்
செவ்வியர் நேயமுந் தீதிலாச் செல்வமு
மூனெலாங் கோயிலா யுயிரெலா மடிமையாய்

வானெலா மேனியாய் வைகுநின் பெருமையை
யோதவு முணரவு முரிய
வரமருள் நித்திய மங்கலச் செல்வியே 28.

வெண்பா.

எராரும் பாலைநக ரின்கயிலா யப்புரத்திற்
சீராரு மன்னையே செய்யோங்க—நீராரப்
பெய்வதே வேண்டுமிகப் பொருளின் மாரியினை
லுய்வதே வேண்டு முலகு 29.

கட்டளைக் கலித்துறை.

குன்றக் குறக்கோதை வெண்ணகை மீந்தவோர் கோகிலத்தோ
டொன்றத் திருமணஞ் செய்தானைப் பெற்றவ ளோங்குதில்லை
மன்றத்தி லென்று நடிப்போற்கு மாமனை மாசில்வள
மொன்றத் திகழ்பாலை வாழ்வார்கள் போற்று முயர்திருவே 30.

மும்மணிக்கோவை முற்றிற்று

வாழ்த்துப்பா.

பாலை நகர்வாழ்க பண்புறுகை லாயபுரத்
தாலையமா ரீசனுமை யாரருளால்—ஞாலமிசை
நன்னகரத் தார்வாழ்க நாடெங்குஞ் செல்வமிகப்
பொன்னகர மொக்கப் பொலிந்து.

ஸ்ரீ ஷண்முக விலாசப் பிரஸ்,
கண்டனூர்.